**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குமாரபாளையம்**

**அ.வ.எண். 7/2020**

**நாள்– 21.07.2025**

**பி.வா.சா. 1 – திரு.வெங்கடேஷ்வரன்**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1) பி.சா.ஆ.3 ல் உள்ள சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்னவென்றால் பழைய சர்வே எண்.645/2, விஸ்தீரணம் 10 செண்ட் ஆகும். மேற்படி ஆவணம் எனது தாயார் வாங்கிய சொத்தின் அட்டவணை 1ன் தாய்ப்பத்திரம் ஆகும். பி.சா.ஆ.4 ல் உள்ள சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்னவென்றால் சர்வே எண்.645/2, விஸ்தீரணம் 10 செண்ட் ஆகும். எனது தாயாருக்கு முதல் பிரதிவாதி தனபால்தான் தாவா சொத்தை விற்றார் என்றால் சரிதான். பி.சா.ஆ.6 ஆவணம் 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரய பத்திரமாகும். பி.சா.ஆ.6லும் சர்வே எண்.645/2 என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் விஸ்தீரணம் 2355 சதுர அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் தாயார் பி.சா.ஆ.6ன் படி தனபாலுக்குப் பாத்தியப்பட்ட சொத்தைதான் கிரையம் பெற்றார் என்றால் அந்த சொத்தின் பகுதியான 1850 சதுர அடி சொத்தைதான் கிரையம் பெற்றார்.

2) பி.சா.ஆ.8ல் ஆவண எண்.3714/2011 படி பாத்தியப்பட்ட சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய சாட்சியப் பிரமாண வாக்குமூலத்தில் அனுபவப்படியும் பாத்தியப்படியும் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.8ன் சொத்து விவரம் 3 தாக்குகளாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.6ல் 3 தாக்குகளாக எழுதப்படவில்லை என்றால் சரிதான். என் தாயார் பெயரில் சொத்து எழுதப்பட்டபோதுதான் 3 தாக்குகளாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான், உட்பிரிவு செய்யப்பட்ட பட்டாவின் படி காட்டப்பட்டுள்ளது. அனுபவப்படி பாத்தியப்பட்ட சொத்தின் விஸ்தீரணம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல, சொத்து விவரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அனுபவப்படி பாத்தியப்பட்ட சொத்து என்று நான் குறிப்பிடும் சொத்து எனக்கு முன் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கிரையப்படி பாத்தியப்பட்ட சொத்தாகும்.

3) பி.சா.ஆ.7 வில்லங்கச் சான்றிதழின் சொத்து விவரம் தனபாலுக்குப் பாத்தியப்பட்ட கிரைய ஆவணத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தின் படி காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.7ல் சர்வே எண் 645/2 பைமாஸ் எண் 174 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.சா.ஆ.7ல் கண்டுள்ள விஸ்தீரணத்தை விட பி.சா.ஆ.8ன் விஸ்தீரணம் அதிகமாக உள்ளது என்றால் சரியல்ல, 1850 சதுர அடிதான் எழுதப்பட்டுள்ளது. பி.சா.ஆ.8ல் என்ன சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பக்கம் எண் 4ல் பழைய சர்வே எண் 645/2 என்றும் அதற்குரிய தனிப்பட்டா செய்யப்பட்ட புதிய சர்வே எண் 539/13,14,15 என்றும் பக்கம் எண் 6,7,8ல் புதிய சர்வே எண் 539/13B,14B,15B என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்கள் 539/13B,14B,15B க்கு வாதியின் பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. 1985,1989 ஆம் ஆண்டுகளில் வாதியின் பெயரில் சொத்து கிரையம் வாங்கப்பட்ட போதே சர்வே எண்கள் 539/13B,14B,15B

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவை கூட்டுப் பட்டா படி பாத்தியப்பட்ட சொத்தாகும். மேற்படி சொத்தில் வாதிக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றாலும் வழக்கிற்காக கூட்டுப் பட்டா என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1989ல் வாதிக்கு சொத்து பாத்தியப்பட்டபோதே மேற்படி உட்பிரிவுகள் இருந்தது என்றாலும் நான் சொல்வதுபோல் தற்போது உட்பிரிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

4) வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் சொத்து, கூட்டுப் பட்டா படி பாத்தியப்பட்டது என்று வழக்கிற்காகப் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண் உட்பிரிவு செய்யப்படுவது குறித்து வாதிக்கு அறிவிப்பு வழங்கப்பட்டதா என்றால் அரசு தரப்பிலிருந்து அன்றைய தினமே அறிவிப்பு வழங்கப்பட்டது. நான் கூறுவது போல வாதிக்கு அறிவிப்பு கொடுக்கப்படவில்லை என்றாலும் அவ்வாறு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்படாத வாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்து 2ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் முன்னாள் கிராம நிர்வாக அலுவலர் என்பதைப் பயன்படுத்தி உட்பிரிவு செய்ததாகக் காண்பித்து பொய்யாக கிரைய ஆவணம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் 5வது அயிட்டமாகக் காட்டப்பட்டுள்ள 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தில் வாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்து கிரையம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

5) அ.வ.எண்.232/2013 ல் எனது தாயார் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் பிரமாணப் பத்திரிக்கையில் கூறியுள்ளது போல இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல, 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கிலும் தரப்பினர் என்பதால் இந்த வழக்கு முன்தீர்ப்பு தடையால் பாதிக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கிலும், இந்த வழக்கிலும் தோன்றாத் தரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு 1ம் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக அறிவிக்கப்பட்டுள்ளதால் இந்த வழக்கு முன் தீர்ப்புத் தடையால் பாதிக்கப்படாது என்றால் சரியல்ல. 14.11.2019ம் தேதி வாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தில் அத்துமீறி நுழைந்து சுவாதீனத்திற்கு இடையூறு செய்தேன் என்றால் சரியல்ல, 2ம் பிரதிவாதியின் பெயரில் சொத்தைக் கிரையம் வாங்குவதற்கு முன்பே விஸ்தீரணங்கள் சரிபார்த்து முள்வேலி அமைக்கப்பட்டிருந்தது. வாதிக்குப் பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்து கிரைய ஆவணம் பி.சா.ஆ.8 தயார் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று வாதி கோரியுள்ள விளம்புகைப் பரிகாரம் அவருக்குக் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் பக்கத்து நிலத்துக்காரர் என்பதால் வாதியின் சுவாதீனத்தை இடையூறு செய்வதால் அவருக்கு நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

6) நான் வாதியின் பக்கத்து நிலத்துக்காரர் என்பதால் தான் வாதியின் சொத்தையும் சேர்த்து கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. வாதியின் சொத்தை ஆக்கிரமித்து துர்லாபம் அடையும் நோக்கில் பொய்யாக பட்டா தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கூட்டுப் பட்டாவில் பொய்யாக பிரதிவாதிகளின் பெயர் குறிப்பிடப்பட்டதை எதிர்த்து 19.11.2019 அன்றே மாவட்ட ஆட்சியர், கோட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர்

ஆகியோருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.8 அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். 1985,1989 ம் ஆண்டுகளிலேயே வாதி சொத்தைக் கிரையம் பெற்றுவிட்டார் என்றாலும் அதனால் வாதிக்கு சொத்து பாத்தியப்பட்டது என்றாலும் சரியல்ல, கூட்டுப் பட்டாவில் முந்தைய உரிமையாளர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளது, அதனால் வாதிக்கு பாத்தியப்பட்ட தனிசொத்து என்றால் சரியல்ல. கூட்டுப் பட்டாவில் முந்தைய உரிமையாளர்களின் பெயர்கள் விடுபடவில்லை என்றாலும் 1985,1989 ஆண்டுகளிலேயே சர்வே எண் 539/13,14,15 கொடுத்து வாதிக்கு தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, மேற்படி ஆண்டுகளில் உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை. மேற்படி ஆண்டுகளில் உட்பிரிவு எதுவும் செய்யப்படவில்லை என்று பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வில்லங்கம் பார்த்தது வேறு சர்வே எண்ணிற்குரியது என்றாலும் 2ம் பிரதிவாதி கிரையம் பெற்றது வேறு சர்வே எண்ணிற்குரியது என்றாலும் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்குக் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**(மறுவிசாரணை இல்லை.)**